22nd September 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: காங்கிரஸ் கட்சி தேசீய அகண்ட மனப்பான்மை உள்ளது. அதை எந்த வகையிலும் வகுப்பு வாதக் கட்சி என்று சொல்ல முடியாது. எப்போதுமே, தவறு செய்பவர்கள்தான் மற்றவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்வார்கள். வகுப்பு வாதத்தில் மூழ்கி அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறவர்களுக்கு எல்லாமே வகுப்புவாதமாகத் தோன்றுவது இயற்கை.

SRI M. KALYANASUNDARAM : தமிழ்நாட்டில் எந்தெந்தக் கட்சியை வகுப்புவாதக் கட்சியாக அரசாங்கம் கருதுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது பற்றி ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்போதுதான் இதெல்லாம் கவனிக்கப்படும். இப்பொழுது அந்தப் பிரச்னை எழவில்லை.

Scheduled Castes' League

* 1700 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் "ஷெட்யூல் வகுப்பினர் லீக்" என்னும் ஸ்தாபனம் ஒரு அரசியல் கட்சியா ?

(இ) அந்த ஸ்தாபன நிகழ்ச்சிகளில் அரசாங்க ஊழியர்கள் சேர்ந்து பங்கு எடுப்பதுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No organisation known as the 'Scheduled Classes League' has come to the notice of the Government.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ஷெட்யூல் வகுப்பினர் லீக் என்ற ஸ்தாபனத்திற்கு ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொடி என்றிருக்கிறது—இதில் ராட்டை போட்டிருக்கிறது. அதை காங்கிரஸ்தான் போடுகிறார்கள். ஆகவே, இது ஒரு அரசியல் கட்சியா, அல்லது எந்த மாதிரியான கட்சி ? அதிகாரிகளும் இதன் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். ஆக இது ஒரு அரசியல் கட்சிதான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றி ஒரு விவாதம் செய்தாலும் நல்லது என்று நினைக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனது விடை, No organisation known as the "Scheduled Classes League" has come to the notice of the Government.

Small-Scale Industries

* 1701 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the incentives and aids provided by the Central and Madras State Government for private entrepreneurs in starting Small-Scale Industries; and

(*b*) the value for which National Small Industries Corporation supplied machinery either for cash or on hire-purchase terms to private industrialists in Madras State during the Second Plan period, year-war?